நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்

# முரசொலி

பக்கங்கள் நான்கு | விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 224 ஆங்கீரச ஆனி 24 (08.07.1992) புதன்

## அகதிகளான 18 பேர் அம்பாறையில் சுட்டுக்கொலை

அம்பாறை சாட்டு எல்லைப் பகுதியில் தங்கியிருந்த 18 தமிழர்கள் நேற்று முன்தினம் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். படையினரதும் முஸ்லிம் ஊர்காவற் படையினரதும் வன்முறைகளினால் இவர்கள் அகதிகளாக சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து இப்பகுதியில் குடிசைகள் அமைத்து தங்கியிருந்தனர். இப்பகுதியை சுற்றிவளைத்த படையினர் சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 18 அப்பாவிகள் பலியாகினர்.

## சுப்பசொனிக் F-7 சீன யுத்த விமானம் விமானப் படையினருக்கு புதிய சிக்கல்

சீனாவிலிருந்து அண்மையில் விமானப்படை கொள்வனவு செய்த எப் - 7 சுப்பசொனிக் விமானங்கள் தொடர்பாகவும் விமானப்படைக்கு புதிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன இந்தவாரம் வெளியிட்டுள்ள சண்டே ரைம்ஸ் இது குறித்த மேலதிக தகவல்களை வெளியிட்டுள்ளது.

★ இந்த விமானங்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்திலேயே இறங்கக் கூடியது இவ் விமானத்திற்கு நீண்ட ஓடு பாதை அவசியம்

★ இந்த யுத்த விமானத்திற்கான உதிரிப்பாகங்களை பெறுவதற்கு எந்த உடன்படிக்கையும் செய்துகொள்ளாமையினால் இதன் விலைகள் அரசுக்கு கட்டுப்படியாகாது

★ சீனா பயிற்சியாளர்கள் ஸ்ரீலங்கா விமானிகளுக்கு இவ் விமானத்தை ஓட்டி வீச்சு மேற்கொள்ள பயிற்சியளிக்க முடியாது என மறுத்துவிட்டனர்

இந்நிலைகளினால் ஸ்ரீலங்கா விமானப்படை இந்த புதிய யுத்த விமானத்தினாலும் சிக்கலை எதிர்கொண்டுள்ளதாக சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது

# பாதுகாப்புச்செலவு அதிகரிக்கும் என அரசு எதிர்பார்க்கவில்லை

### பாராளுமன்றத்தில் அமைச்சர் ரணில்

வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைகளினால் அரசுக்கு பாதுகாப்புச் செலவீனம் அதிகரித்துள்ளது வரவு செலவுத் திட்டம் (பட்ஜட்) தயாரிக்கும்போது இவற்றை அரசு எதிர் பார்க்கவில்லை.

இவ்வாறு அமைச்சர் ரணில்விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில பாதுகாப்பு வரி அறவீட்டுக்கான சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு வரியை இரண்டு சதவீதம் அதிகரிப்பதனால் 2400 மில்லியன் ரூபா மேலதிக வருமானம் கிடைக்கும் என கொள்கைத் திட்டமிடல் ராஜாங்க அமைச்சர் விமல் விக்கிரமசிங்க சபையில் உரையாற்றிய போது சுட்டிக்காட்டினார்.

இதனிடையே பிரதமர் டி. பி. விஜேதுங்க சபையில் வெளியிட்ட தகவலில் பாதுகாப்புச் செலவாக ஏற்கனவே பட்ஜட்டில் ஒதுக்கிய நிதிக்கும் மேலாக மூவாயிரம் மில்லியன் ரூபா தேவைப்படுவதாகக் குறிப்பிட்டார்.

இதனால் அரசின் பாதுகாப்பு வரி அறவீட்டின் மூலமும் பாதுகாப்புச் செலவுக்கு வேண்டிய நிதியிலும் விட 600 மில்லியன் ரூபா குறைவாகக் கிடைக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது

பாதுகாப்புச் செலவின அதிகரிப்பினால் அரசு திணறுவதையும் வரி அதிகரிப்பு மூலம் கூட அதை ஈடுகட்ட முடியாத நிலையில் அரசு உள்ளதையும் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### ★ சபையில் அரச தரப்பு எம். பி,

## தெரிவுக்குழு முடிவு வரும்வரை யுத்தம் தொடர வேண்டும்

இனப் பிரச்சினைக்கு தீர்வு காண நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவு வரும்வரை யுத்தம் தொடரவேண்டும்,

இவ்வாறு ஐ. தே. க. எம். பியான ஹரிச்சந்திர கொரியா சபையில் நேற்றுக் கூறினார்,

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவோ, யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரவோ அரசு எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என ஐக்கிய சோஷலிசக் கட்சி எம், பி அதாவுட செனிவிரட்ன கூறினார்.

## கம் உதாவ நிதியை மீதப்படுத்தின் வரி தேவையில்லை

கம் உதாவ நிகழ்ச்சிக்கு செலவிடும் பல கோடி ரூபாவை மீதப்படுத்தினால் இந்த வரிகளை மக்களிடம் இருந்து அறவிடத் தேவையில்லை.

இவ்வாறு கொழும்புமாவட்ட சுதந்திரக்கட்சி எம். பியான நிமால் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் நேற்றுக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வாடியடிச் சந்தியில் படையினர் தரித்துள்ளனர்

பலவேகயப் படையினர் தற்போது வாடியடிச் சந்திப் பகுதியில் தங்கியுள்ளனர். இவர்கள் அங்கு தமது நிலைகளில் தொடர்ந்து தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக படையினர் மேலதிக துருப்புக்களையும் இராணுவ சாதனங்களையும் எதிர்பார்த்துள்ளதாகத் தெரிகிறது.

## வீரச்சாவு

மட்டக்களப்பு பெண்டு சேனைப் பகுதியிலுள்ள புலிகளின் முகாமை சுற்றிவளைக்க முயன்ற படையினருடன் இடம்பெற்ற மோதலில் கப்டன் ரமணி (க. நாகேந்திரன், வழைச்சேனை), குகனேசன் (த. காராளசிங்கம், அம்பிலாந்துறை), சேகுராஜா

—04 ஆம் பக்கம் பார்க்க

## குடாநாடு துண்டிப்பாம்

யாழ் குடா நாட்டை ஏனைய நிலப்பரப்பிலிருந்து துண்டித்து விட்டதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக இந்திய வானொலி நேற்றிரவு தெரிவித்தது. வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு வரையிலான பாதையையே தாம் கைப்பற்றியதாக அதிகாரிகள் குறிப்பிட்டதாக அவ் வானொலி மேலும் தெரிவித்தது.

## 9 உளவாளிகளுக்கு வவுனியாவில் மரண தண்டனை

ஸ்ரீலங்கா படையினருக்கு இரகசியமாகத் தகவல்களை வழங்கி வந்த 9 உளவாளிகளுக்கும் நேற்று முன்தினம் மரண தண்டனை வழங்கப்பட்டது.

வவுனியாவில் உள்ள புலிகளின் தடை முகாமில் வைத்து புலிகள் இந்த 9 உளவாளிகளுக்கும் மரண தண்டனை வழங்கினர்.

இவர்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் கடந்த வாரம் வெளியானது தெரிந்ததே.

## தலைவர் பிரபாகரனை நாடு கடத்த சிறிமாவோ எதிர்ப்பு

"நாம் பதவியிலிருந்த போது குட்டிமணியை எமது நாட்டுக்கு நாடு கடத்தும்படி கோரியதற்கமைய இந்திரா காந்தி அவரை இங்கு அனுப்பினார். குட்டிமணி இலங்கையரென்பதாலேயே இங்கு திருப்பியனுப்பப்பட்டார்.

ஆனால் திரு பிரபாகரனைப் பொறுத்த வரை எப்படியாயினும் அவர் ஒரு இலங்கையர். ஆனால் இந்தியா ஒரு இலங்கையரை இந்தியாவிலேயே விசாரிக்க நினைக்கிறது" இவ்வாறு "ஐலண்ட் நியூஸ்" நிருபர் சின்ஹ ரணதுங்கவுக்கு வழங்கிய பேட்டி

= 04ஆம் பக்கம் பார்க்க

### ★ நெவில் கருணாரட்ன

## பிரபாகரனைப் பிடிக்கும் நடவடிக்கை சாத்தியமற்றது

"வடமாகாணம் முழுவதும் விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது அரசின் நிர்வாக ஆதிக்கம் அங்கு இல்லை பிரபாகரன் எங்கு இருக்கிறார் என்பது எமக்குத் தெரியாது இந்திய அமைதிப் படையினாலும் இராணுவ ரீதியில் பிரபாகரனைப் பிடிக்க முடியவில்லை பிரபாகரனைப் பிடிப்பதென்பது தற்போது ஒரு ஊகம் மட்டுமே ஆனால் அதிர்ஷ்டவசமாக

... 04 ஆம் பக்கம் பார்க்க

### ● குமார்பொன்னம்பலம் அறிவிப்பு

## மோதிலால் நேரு காங்கிரசை பிரதிநிதித்துவப்படுத்தமாட்டார்

திரு. மோதிலால் நேரு இனிமேல் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியை எந்தக் கூட்டத்திலும் பிரதிநிதித்துவம் செய்ய மாட்டார் அவர் இனிமேல் எந்த விடயத்திலும் கட்சிக் கருத்தைப் பிரதிபலிக்கவும் மாட்டார்

இவ்வாறு அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் "சண்டே ரைம்ஸ்" ஆங்கிலப் பத்திரிகைக்கு எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்

சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் ஜூன் இருபத்தெட்டாம்

...04 ஆம் பக்கம் பார்க்க

# ‘அமைச்சர் தொண்டா திறமை மிக்க தலைவர்’

அமைச்சர் தொண்டமான் நேர்மையான திறமை மிக்க தலைவர் தம்மைச் சார்ந்த மலையக சமுதாய மக்களுக்கு அவர் சேவை செய்கிறார். இதற்காக அவர்மீது பொறாமைப்படுவதில் என்ன அர்த்தமுண்டு?

தகவல்துறை இராஜாங்க அமைச்சர் ஏ.ஜே.ரணசிங்க இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

நேற்று முன்தினம் காலை தனது அமைச்சில் பத்திரிகையாளர் மகாநாடொன்றை நடத்திய அவர் ‘அமைச்சர் தொண்டமான் இந்திய வம்சாவளியினருக்கு பிரஜா உரிமை பெற்றுக்கொடுப்பதில் வெற்றி கண்டார் இந்திய வம்சாவளி மக்களின் நலனுக்காக அவர் உழைக்கிறார் எனவும் மேலும் கூறினார்.

# குடாநாட்டில் பரவலாக நேற்று தூறல் மழை!

இலங்கையின் பல பாகத்திலும் வானம் மப்பும் மந்தாரமுமாக இருக்குமெனவும், இடை இடையே பலத்த மழை பெய்யுமெனவும், காற்று வீசுமென்றும் வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்தது.

மேலும், தென்மேற்குப் பகுதி கடல்கள் கொந்தளிப்பாக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

பருவ காலநிலையில் ஏற்பட்ட மாற்றமே இதற்குக் காரணமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளையும், குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் மாலையும் நேற்றுக் காலையும் பரவலாக தூறல் மழை பெய்தது.

# போலி சி.ஐ.டி களில் ஒருவர் சிக்கினார்

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து கொழும்பு வரும் தமிழ் மக்களிடம் சி.ஐ.டி எனக்கூறி பணம் பறித்து வந்த கும்பலைச் சேர்ந்த ஒருவர் புறக்கோட்டைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்

கொழும்பு நகரில் இப்பொழுது இத்தகைய போலி சி.ஐ.டிக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது

ரயில் நிலையங்கள், லொட்ஜ்கள், விடுதிகள், பஸ் நிலையங்கள் போன்ற இடங்களில் தமிழ் மக்களின் நடமாட்டத்தை அவதானித்து அவர்களைப் பின்தொடர்ந்து சென்று இந்தக் கும்பல்கள் பணத்தை அபகரித்து வருகின்றன.

# வட-கிழக்கைப் பிரிப்பது நாட்டையே பிளவுபடுத்திவிடும்

-அமைச்சர் தொண்டா

இனப்பிரச்சினைக்குத் தீர்வு எதனையும் காணமுடியாத நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு உள்ளதாகத் தெரிவிக்கப்படும் இச்சூழ்நிலையில் இதொகா தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய அமைதிகாக்கும் படைக்குத் தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் திபேந்தர்சிங்கின் கூற்று ஒன்றையும் சுட்டிக்காட்டியுள்ளார்

“எந்த ஒரு கிளர்ச்சியும் இராணுவ ரீதியாகத் தீர்க்கப்பட்டதுமில்லை. தீர்க்கப்படக்கூடியதுமில்லை. ஆகவே ஒரு அரசியல் தீர்வு காணப்படவேண்டும்’ என மேஜர் ஜெனரல் திபேந்தர்சிங் சுட்டிக்காட்டியுள்ளார் என்று தொண்டமான் கூறியுள்ளார்.

செங்கோல் ஆட்சி அழிந்துவிடுவது அரசியலை அடிக்கடி ஒரு முடிவு கட்டத்திற்குக் கொண்டு செல்வதாகவும் தெரிவித்த அமைச்சர் வடக்கையும் கிழக்கையும் இரண்டாகப் பிளவுபடுத்துவது நாட்டையே இரண்டாகப் பிளவுபடுத்துவதாகி விடுமெனவும் எச்சரித்துள்ளார்.

# ஐ.ஐ.தே.மு. விஞ்ஞாபனம் டிசம்பரில்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கொள்கை விஞ்ஞாபனம் டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள கட்சியின் வருடாந்த மாநாட்டில் வெளியிடப்படுமென கட்சியின் துணைத்தலைவர் காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்

வெளியுறவு பொருளாதாரம், கல்வி மற்றும் சமூக சேவைகள் தொடர்பான கொள்கைகள் இந்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொருளாதாரக் கொள்கை பற்றிக் குறிப்பிடும் தற்போது இங்கு கடைப்பிடிக்கப்படும் மார்க்கோஸ் பாணியிலான பிலிப்பைன்ஸின் முதலாளித்துவ கொள்கைக்கு சமனானதாகவுள்ளதெனக் குறை கூறினார்.

சந்தைப் போட்டிகளின் அடிப்படையில் மூலதனத்தை ஒன்று திரட்டி நாட்டை அபிவிருத்தி செய்வதே முதலாளித்துவமாகும் எனவும் திசாநாயக்க கூறினார்.

# தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுதலை செய்யக் கோரிக்கை

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கைதியும் 3 மாத காலத்திற்குள் விடுதலை செய்யப்படுவதை அல்லது விசாரணைக்கு உள்ளாக்கப்படுவதை நடைமுறைப்படுத்த ஒவ்வொரு தடுப்பு முகாமிற்கும் பொறுப்பாக ஒரு குழு நியமிக்கப்படவேண்டும் என்று நவசமசமாஜக் கட்சி எம்.பி. வாசுதேவநாணயக்கார ஜனாதிபதியைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் அண்மையில் பூஸா தடுப்பு முகாமில் இடம் பெற்ற அசம்பாவிதம் மிகவும் பாரதூரமானதென்றும் கடுமையான அலட்சிய மனோபாவத்தின் விளைவே இது என்றும் கண்டித்துள்ளார்.

★ பாராளுமன்றக் குழு கூடி முடிவு

# நான்கு அம்சத் திட்டத்தை சுதந்திரக்கட்சி நிராகரிக்கும்

ஏழு தமிழ்க் கட்சிகளினால் இனப்பிரச்சினைத் தீர்வு யோசனையாக முன்வைக்கப்பட்ட நான்கு அம்சத் திட்டத்தை நிராகரிப்பதென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றக்குழு நேற்று முன்தினம் மாலை கூடி இம் முடிவை எடுத்தது

இந்த நான்கு அம்ச தீர்வுத் திட்டத்தில் வடக்கு கிழக்கு இணைப்பும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை தெரிந்ததே

தமது நான்கு அம்சத் தீர்வுத் திட்டம் குறித்து அவற்றைத் தயாரித்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்துள்ள ஏழு தமிழ்க் கட்சிகளினதும் தலைவர்கள் அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை சந்தித்து விளக்கமளித்தமையும், அப்போது இனப்பிரச்சினை தீர்வுக்கு தனது கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்குமென ஸ்ரீமாவோ தெரிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நவசமசமாஜக்கட்சி ஆதரவு வழங்கும்

ஏழு தமிழ்க் கட்சிகளினால் சமர்பிக்கப்பட்டுள்ள நான்கு அம்சத் தீர்வுத் திட்டத்திற்கு நவசமசமாஜக்கட்சி தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது

கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணரட்ணா விடுத்துள்ள அறிக்கையொன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புளொட் அலுவலகம் அருகில் துண்டிக்கப்பட்ட ஆணின் தலை

தாண்டிக்குளம் தடை முகாம் பகுதியில் துண்டிக்கப்பட்ட ஆணின் தலையென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தாண்டிக்குளம் தடை முகாமுக்கு அருகிலுள்ள புளொட் இயக்க நிலையத்தில் காணப்பட்ட அனாதரவான பெட்டி யொன்றுக்குள்ளேயே நேற்று முன்தினம் காலை இந்தத் தலை காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 3 படையினர் பலி

வெற்றிலைக்கேணி- கோவில் வயல் பகுதியில் ஞாயிறு அன்று விடுதலை புலிகளுடன் ஏற்பட்ட மோதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டதாகவும் மேலும் 18 படையினர் காயமடைந்ததாகவும் கூட்டு படைத் தலைமையகம் தெரிவித்தது

## இறுதிப் போட்டிக்கு தெரிவு

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், திருநெல்வேலி இந்து இளைஞர் கழக அணிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்குமிடையில் இடம் பெற்ற ஆட்டத்தில் அரியாலை அணி 10:0 என்ற கோல்கணக்கில் வென்றது

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இன்னொரு போட்டியில் கொக்குவில் பொற்பதி அணி அதனை எதிர்த்தாடிய நல்லூர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வென்று இறுதி ஆட்டத்தில் ஆடத்தகுதிபெற்றது. 16

## அம்பாள்உற்சவம்

கொக்குவில் நந்தாவில் அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தினசரி இரவு 7 மணிக்கு வ. குமாரசாமி ஐயர் அவர்களின் சமயச்சொற்பொழிவு நடைபெறுகின்றது. உற்சவ காலத்தின் போது மாணவர்களுக்கான சமய அறிவுப் போட்டியொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது 37

## ஞான வைரவர் அலங்கார உற்சவம்

சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவ சுவாமி தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

தினசரி பகல் 11 மணிக்கு அபிஷேகம் இடம்பெறும் மாலை 6 மணிக்கு சுவாமி திருவீதி உலா நடைபெறும். 16 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குத் தீர்த்த உற்சவமும் இடம்பெற்று 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்குப் பொங்கல் விழாவும் நடைபெறும். 50

# ‘நெய்தல்’ ஒலிப்பதிவு நாடா 10ஆம் திகதிவெளியாகிறது!

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்புக் கலைஞர்களை இணைத்து, விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக்கழகம் ‘நெய்தல்’ எனும் பாடல் ஒலிப்பதிவு நாடாவை உருவாக்கியுள்ளது

இந்த ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டுவிழா எதிர்வரும் 10 07 1992 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு குருநகர் புனித சம்பத்திரிசியார் (சென்/பற்றிக்ஸ்) கல்லூரியில், கடற்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.மறவன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த விழாவை கடற்புலிகளின் தளபதி திரு.கங்கை அமரன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

வரவேற்புரையை கடற்புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி நளாயினியும் வெளியீட்டுரையை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு.புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்துவர்,

இதனையடுத்து கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு, சூசை கலைஞர்களைக் கௌரவிப்பார், ஆசியுரையை வண.பிதா யோசேப் ஜீ.ஏ. பிரான்சிஸ் அடிகள் வழங்குவார்.

சிறப்புரைகளை திரு.மு.வே.யோ. வாஞ்சிநாதன் விடுதலைப்புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு.செ.தமிழேந்தி, திரு.அ.சா கரியகுமார் ஆசிரியர், மற்றும் இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் ஆகியோர் ஆற்றுவர்.

வலிகாமம் கிழக்கு கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.சங்கீதன் நன்றியுரை கூறுவார், சிறப்பு நிகழ்ச்சியாக இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் தாயக எழுச்சிப் பாடல்களை உள்ளடக்கிய இன்னிசைக் கச்சேரியை நிகழ்த்துவார்.

இந்த ‘நெய்தல்’ இசைப் பாடல் நாடாவின் இசையும் பாடல்களும் இதுவரை வெளிவந்த பாடல்களிலிருந்தும் வித்தியாசமானதாக அமைந்துள்ளன, இந்தப் பாடல்களின் இசை வடிவம் எங்களுடைய இசைப் பாடல்களின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும், கடலும், கடல் சார்ந்த பிரதேசமுமான நெய்தல் நிலத்தின் போராட்ட உணர்வுகளையும், செயற்பாட்டையும், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் கலையாக வெளிப்படுத்துகின்றன இந்தப் பாடல்கள், சிறப்புமிக்க இந்த ‘நெய்தல்’ இசைப்பாடல் வெளியீட்டு விழாவுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்,

# பொருளாதார மாற்றங்களுக்கு வற்புறுத்தல்

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் அதிகாரிகள் சிறிலங்காவுக்கு பொருளாதார உதவிகள் வழங்குவது தொடர்பாக நிதித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திவிட்டு கடந்த வெள்ளியன்று புறப்பட்டுச் சென்றனர்

இத்தூதுக்குழு நாட்டின் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.8 வீதத்திற்கு மட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளதாக நிதித்துறை ஆய்வாளர்கள் தெரிவித்தனர்,

ஆனால் பற்றாக்குறை இந்த எல்லையிலும் பார்க்க அறுநூறு கோடி ரூபாவினால் ஏற்கனவே அதிகரித்துள்ளது

நாட்டின் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.6 வீதத்திற்கு மட்டுப்படுத்த வேண்டுமெனவும் வற்புறுத்தப் பட்டுள்ளதெனவும் தெரிகிறது.

இந்த இலக்குகளை அடைவதற்கான பல மாற்றங்களை இத்தூதுக்குழுவினர் சிபார்சு செய்துள்ளனர் தனியார் மயப்படுத்தல் வரி விதிப்பு முறை மாற்றங்கள் என்பன இவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இம்மாற்றங்கள் அமுல் செய்யப்படாவிட்டால் இந்நிறுவனங்கள் வழங்கும் மூன்றாம் தவணை நிதியுதவி தடைப்படலாம்.

# நான்கு அம்ச திட்டம் ஹெல உறுமய நிராகரிப்பு

"கிழக்கிலுள்ள சிங்களவரின் அரசியல் பலத்தை அதிகரிக்கும் பொருட்டு கிழக்கு மாகாணத்தை வட-மத்திய மாகாணத்துடன் இணைத்தால் இந்த ஏழு தமிழ்க் கட்சிகள் என்ன சொல்வார்கள்?" என ஹெல உறுமயவின் இணைச் செயலாளர் திலக்கருணாரத்ன எம். பி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஏழு கட்சிகளும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு சமர்ப்பித்துள்ள நான்கு அம்ச கோரிக்கைகள் தொடர்பாக கொழும்புப் பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

1981 குடிசன மதிப்பின் படி இலங்கையின் மொத்த சனத்தொகையில் வடக்கு- கிழக்கில் வாழ்ந்த தமிழர்கள் 9 7 வீதமானவர்களே இவர்களுக்கு இலங்கையின் 28 7 வீதமான நிலப்பரப்பின் மீதும் 60 வீதமான கடற்பரப்பின் மீதும் அதிகாரம் வழங்க கோருவது இனவாதமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கிழக்கின் சனத்தொகையில் 5702 வீதமான முஸ்லிம் சிங்களமக்கள் வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால் அதன் சனத்தொகையில் 30.9 வீதத்திற்கே அரசியல் பலம் கொண்டவர்களாவார்கள் எனக் கூறும் இவ்வறிக்கை வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்புக் கோரிக்கை நாட்டின் ஐக்கியத்திற்கும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் குந்தகமானது என்று தெரிவித்துள்ளது.

இதுடன் ஹெலஉறுமய இந்த ஆலோசனைகளைக் கண்டிப்பதாகவும் நிராகரிப்பதாகவும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெல உறுமய சுதந்திரக் கட்சியில் சிங்கள பேரினவாத பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட உட்பிரிவாகும்,

சுதந்திரக் கட்சியும் இந்த நான்கு அம்ச திட்டத்தை நிராகரிக்க நேற்று முன்தினம் முடிவெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அனுராவுக்கு பாராட்டுவிழா அனுருத்த கட்சிப் பணிகளில்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவுக்கும் ஏனைய கட்சிப் பதவிகளுக்கும் ஆகஸ்ட் இரண்டாம் திகதி நடைபெறவிருந்த தேர்தல் கட்சித் தலைமையினால் காலவரையின்றி ஒத்திபோடப்பட்டுள்ளது.

அனுரா ஆதரவாளர்கள் கட்சித் தலைவர் பதவி தவிர்ந்த பதவிகளுக்கு போட்டியிட முற்பட்டதால் கட்சிக்குள் பிளவு ஏற்படுவதைத் தடுக்கவே தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினராக பதினைந்து வருடங்கள் அனுரா பண்டாரநாயக்க சேவையாற்றியதை பாராட்டி அவருக்கு விழா எடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இது தொடர்பாக பொதுக்கூட்டங்கள் கலந்துரையாடல்கள் மற்றும் வைபவங்கள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஜூலை பதின் நான்காம் திகதி அனுராதபுரத்தில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.

இது இப்படியிருக்க அனுரா எதிர்ப்பாளரும் திருமதி சிறிமா பண்டாரநாயக்க ஆதரவாளருமான அனுருத்த ரத்வத்த மீண்டும் திருமதி பண்டாரநாயக்கவின் றொஸ்மீட் பிளேஸ் இல்லத்திலிருந்து செயற்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. கண்டியில் இடம்பெற்ற விபத்து காரணமாக சில காலம் ரத்வத்த கட்சி வேலைகளில் ஈடுபடாமல் ஓய்வு எடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# அ. தி. மு. க. தொண்டர் குத்திக் கொலை

அ.தி.மு.க. தொண்டரான ஆர். பாண்டியன் (40) என்பவர் நேற்று சென்னையில் இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் குத்திக் கொல்லப்பட்டார்.

இவர் மனைவியுடன் காரில் சென்றுகொண்டிருந்த போது ஓட்டோவில் வந்த சிலர் காரை மறித்து இவரைக் குத்திக் கொன்றனர்.

உச்சப்பகுதியில் சிறு காயங்களுக்குள்ளான திருமதி பாண்டியன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## கம் உதாவ...

கூறினர்.

இந்த அரசு அவசரகாலத்தை நீடித்துக் கொண்டு பதவியில் இருக்கப்பார்க்கிறது.

வடக்கு கிழக்கு யுத்தத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர அரசு விரும்பவில்லை எனவும் அவர் சொன்னார்.

---

## வீரச்சாவு...

த. கண்ணன், கிரான்), ஜேசுசிறி (த. இராசதுரை, களுமுனை), ராஜன் (கு. கலைச்செல்வன்; கிரான்குளம்). பு..., (த. சந்திரன், மண்டூர்) ...லம். சொரூபசீலன் (க. தவராஜா, சித்தாண்டி) பவளமூர்த்தி (க. சுதா, கல்முனை) 2-ம் லெப். சிறிசாந்றலிங்கம் (சே. சத்தியவடிவேல் - எருவில்). தட்சணாமூர்த்தி (மு. தர்மலிங்கம் - அம்பாறை) தயாளன் (மு. மோகன் - மட்டக்களப்பு). தேவானந்தன் (ச. மாதவன் - அம்பாறை). உமைகுமார் (க. சதிர்காமலிங்கம் - பதுளை) ஆகிய 13 போராளிகள் வீரச்சாவை எய்தினர்.

---

## மோதிலால்...

திரு மோதிலால் நேரு இக்கட்சியின் இணைத்தலைவர் என்றவகையில் ஜனாதிபதி பிரேமதாசாவை புகழ்ந்து எழுதிய கட்டுரை தொடர்பாகவே குமார் பொன்னம்பலம் இக்கடிதத்தை அனுப்பியுள்ளார்.

மோதிலால் நேரு தமது கட்டுரையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஜனாதிபதி உயர் முக்கியத்துவம் அளிக்கிறார் எனக் கூறியமை வடக்கு - கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர் பாதுகாப்பு உணர்வுடன் வாழ்கின்றனர் எனக்கூறியமை போன்ற விடயங்களை குமார் பொன்னம்பலம் குறைகூறியுள்ளார்.

அண்மைக்காலங்களில் மோதிலால் நேரு ஜனாதிபதிக்கு ஆதரவான கருத்தைக் கூறிவந்த அதேவேளை குமார் பொன்னம்பலம் அதற்கு எதிரான கருத்துக்களை கூறிவந்தார்.

# அமைச்சராக, தலைவராக நான் பேசலாம்

- தொண்டமான்

இனப்பிரச்சினை தொடர்பாக பேசும் பொழுதெல்லாம் நான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் என்ற முறையிலேயே பேசி வருகிறேன் நாட்டின் அமைச்சரவையைச் சார்ந்த அமைச்சர் என்ற வகையில் அல்ல.

இவ்வாறு கிராமிய கைத்தொழில் அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான எஸ். தொண்டமான் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரத்தில் அமைச்சரவை கருத்துடன் முரண்படுவதால் அமைச்சர் தொண்டமான் தமது மந்திரிப் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்றகோரிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனம் வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்க்கின்றபோதும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமானால் வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டை அமைச்சர் தொண்டமான் கொண்டுள்ளார்.

"ஒரு பெண் தாயாகவும், மனைவியாகவும் இருகடமைகளைச் செய்வது போல நானும் இரண்டு கடமைகளைச் செய்யலாம். அப்படி ஏன் செய்ய முடியாது? நானும் அப்படிச் செய்யலாம் எனவே தான் சிலசமயங்களில் இ.தொ.கா. தலைவர் என்ற முறையில் பேசுகிறேன்" என்றும் கூறினார்.

ஏதாவது ஒருவகையில் நீங்கள் இணைப்புக்கு நிச்சயமாக ஆதரவளிக்கிறீர்களா எனக் கேட்கப்பட்டபோது அமைச்சர் தொண்டமான் மிகச் சாதுரியமாக "ஆலோசனைகள் இன்னும் நடைபெறுவதால் தெரிவுக்குழு உறுப்பினர் என்ற வகையில் இது பற்றி கருத்துத் தெரிவிக்க முடியாது" எனத்தெரிவித்தார்.

---

## பிரபாகரனைப்...

சிறிலங்காப் படையினரிடம் கையளிக்கப்பட்டால் மட்டும் நாடுகடத்தும் பிரச்சினை எழும்."

இவ்வாறு இந்தியாவுக்கான சிறிலங்கா தூதுவர் நெவில் கருணாரட்ன சண்டே ஒப்சேவருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதி பிரேமதாஸ பிரபாகரனை நாடுகடத்தும் விடயமாக ஒன்றும் குறிப்பிடவில்லையென்றும், அதற்கு மாறாக, தவறாக வழிநடத்தப்பட்ட சிறிலங்கா தமிழர்களை அவர்கள் தவறிழைத்திருப்பினும் எந்த ஒரு வெளிநாட்டவர்களிடமும் கையளிக்க முடியாது ஏனெனில் அவர்கள் சிறீலங்கா பிரஜைகள் எனக் குறிப்பிட்டதாகக் கூறினார்.

பிரபாகரனைப் பிடிப்பது விடயமாக இந்திய அதிரடிப் படையை சிறிலங்காவுக்கு அனுப்புவது பற்றிய இந்திய அரசியல்வாதிகளின் பேச்சுகள் பொறுப்பற்ற பேச்சுகள் எனத் திரு கருணாரட்ன கூறினார்.

மேலும் அப்படியான ஒரு கோரிக்கையை சிறிலங்கா பரிசீலிக்கலாம் எனக் கூறிய திரு. கருணாரட்ன அதிரடிப் படை நடவடிக்கை என்பது பொறுப்பற்ற வாயாடித் தன்மையுள்ள அரசியல்வாதிகளின் கூற்று எந்த ஒரு பொறுப்புள்ள அரசும் வேறொரு நாட்டு அரசாங்கம் செயற்படுத்தும் வழிமுறை இராணுவ புலனாய்வு: அரசியல் தாக்கம் ஆகியவற்றை நன்கு பரிசீலிக்காது இப்படிக் கோரமாட்டாது என மேலும் தெரிவித்தார்.

"இந்தியாவுக்கு உள்நாட்டுப் பிரச்சினைகள் உண்டு. பஞ்சாப், அஸாம் ஆகிய பிரச்சினைகளை இந்தியா கவனிக்க வேண்டும். சிறிலங்காவின் அனுமதியின்றி இந்தியா பிரபாகரனைப் பிடிப்பதற்கு படையெடுப்பின் இந்தியாவின் அயல் நாடுகள் இந்தியாவுக்குள் அதிரடிப்படைகளை அனுப்பின் இந்தியாவின் உணர்ச்சி எத்தகையதாக இருக்கும்? எந்த ஒரு பொறுப்பான அரசும் இதைச் சிந்திக்கும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

---

கம் உதாவ [illegible]யின் போது மோதிலால் நேரு புத்தளைக்குச் சென்று ஜனாதிபதிக்கு மாலை சூட்டி பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

இவைகாரணமாக சீர்கெட்டிருந்த இந்த இருவரது கட்சி உறவுகள் மோதிலால் நேரு அநேகமாக கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலையை உருவாக்கியுள்ளதெனக் கருதப்படுகிறது.

## ● காமினி ஜெயசூரிய

# அமைச்சர் தொண்டமானை பதவி நீக்கம் செய்யவேண்டும்

வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்துவதினால் அமைச்சர் தொண்டமான் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறியுள்ளார். எனவே அவரை அமைச்சரவையிலிருந்து பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென சிங்களவர் பாதுகாப்பு அமைப்பின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான காமினி ஜயசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கோரியுள்ளார்.

அரசாங்கம் இணைப்புக்கு எதிரானதென்பதால் அமைச்சரவையிலிருந்து கொண்டே நிரந்தர இணைப்பே இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டுவருமென திரு. தொண்டமான் கூறிவருவது கூட்டுப் பொறுப்பை மீறிய செயல் எனவும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறிக்கொண்டு திரு. தொண்டமான் எப்படி அமைச்சரவையில் தொடர்ந்திருக்கமுடியுமெனக் கேள்வி எழுப்பியுள்ள அவர் ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமியும் இதே குற்றச்சாட்டுக்கு ஆளாகின்றார் எனவும் இவ்வறிக்கை கூறுகின்றது.

திரு. தொண்டமான் மேலும் பல மலையகத் தமிழர்களுக்கு வாக்குரிமை கேட்பது தமது அரசியல் பலத்தை அதிகரிக்கவே என்றும் இதுபற்றி சிங்கள தலைவர்கள் உஷாராக இருக்க வேண்டுமெனவும் காமினி ஜயசூரிய கூறியுள்ளார்.

## ★ சண்டே ஒப்சேவர் கட்டுரைகள்

# யாழ் நூலகம் எரிப்பு குற்றச்சாட்டு குறித்து ஜே. ஆர். ஆத்திரம்

முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தனா லேக்ஹவுஸ் பத்திரிகைகள் வெளியிட்ட சில கட்டுரைகள் தொடர்பாக சேறிய நிபந்தனையற்ற மன்னிப்பு கோருதல் அல்லது முப்பத்தொன்பது கோடி ரூபா மான நட்ட ஈடு தமக்கு செலுத்த வேண்டும் என்ற விவகாரத்தில் யாழ்ப்பாண நூல் நிலையம் எரிக்கப்பட்ட விடயம் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கட்டுரைகளிலும் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது தொடர்பாக திரு. ஜயவர்த்தனா அப்போதைய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிறல் குணதிலக விடமிருந்து அறிக்கை கோரியிருந்தார். திரு நிறல் குணதிலக இப்பொழுது சேவையிலிருந்து இளைப்பாறியுள்ள சிரேட்ட ஆயுதப்படை அதிகாரி ஒருவர் மீது குற்றம் கண்டிருந்தார். ஆனால் அந்தப் படை அதிகாரி குற்றத்தை மறுத்தார்,

இந்த விடயம் தொடர்பாக கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு திரு ஜே ஆர் ஜயவர்த்தனாவை ஆத்திரமடையச் செய்ததென்றும் தேவையென்றால் இவ்விடயத்தில் நீதிமன்றத்தில் தோன்றி சாட்சியமளிக்கக்கூட தாம் தயார் எனவும் அவர் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புத்தளையில் ஜே. வி. பி. தாக்குதல் முயற்சி தடுக்கப்பட்டதாம்

புத்தளையில் நடைபெற்ற கம் உதாவ கொண்டாட்டங்களை குழப்புவதற்கு ஜே. வி. பி தீவிரவாதிகள் எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக ஐந்து பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்

செங்கல் கட்டித் தொழிற்சாலை ஒன்றை முற்றுகையிட்டபோது துவக்கு ஒன்றையும், கிரனைட் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து இந்தத் தொழிற்சாலையின் உரிமையாளர் தமது மனைவியையும் பிள்ளையையும் கொலை செய்துவிட்டு தற்கொலை செய்துகொண்டார் என்றும் இவர் ஜே வி பி தலைவர் றோகண விஜேவீரவின் வாகனச் சாரதியாக இருந்தவர் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

---

## தலைவர்...

...வொன்றில் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

மேலும் "திரு. பிரபாகரனை நீங்களே விசாரிக்க வேண்டுமென்றே நாம் அவரைக் கோருவோம். இங்கே விசாரித்தால் தான் அவரை தண்டிக்கலாம் அல்லது அவர் சயனைட் அருந்தி மரணமடைந்து விடுவார்" எனவும் திருமதி பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லக்ஷ்மி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 08-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது